ஹை டெக்

# மொபைல் கிளாஸ் ரூம்

## SoloLearn: Learn to Code for Free

goo.gl/3XB4mA

கோடிங்ல சி தெரிஞ்சிருந்தா போதுங்கிறது சி++ ஆச்சு, அப்புறம் ஜாவா பைத்தான் தெரியாதான்னு இருந்து, பிக்டேட்டா ஹதூப்னு ஓடிக்கிட்டே இருக்கு, எது எப்படி இருந்தாலும் கோடிங் மொழிகளை சுலபமா சொல்லித்தருது இந்த செயலி.

பைத்தான், HTML, ஜாவா, ரூபி போன்ற 12 ப்ரோக்ராமிங் லாங்வேஜ் கற்றுக்கொள்ளலாம் இந்த செயலியில்.

நண்பர்களோடு கோடிங் பற்றி டிஸ்கஸ் செய்யவும் மற்றவர்களுக்கு கற்க உதவி செய்யவும் முடியும் இந்த செயலியில்.



## Learn to Speak English

goo.gl/JVCVUU

ஆங்கிலம் சுலபமாக கற்றுக் கொள்ள ஒரு எளிமையான செயலி.

900 பாடங்களுடனும் 8000 ஆடியோ ஃபைல்களுடனும் ஆங்கிலத்தை பிழையின்றிப் பேச கற்றுத்தருகிறது இந்த செயலி.

எந்த வார்த்தையை எப்படி உபயோகித்து வாக்கியமாக்க வேண்டும் என்பது போன்ற பொதுவாக நாம் தடுமாறும் இடங்களுக்கான பாடங்கள் இருக்கின்றன.

பெரும்பாலான பாடங்களில் இடம்பெற்றுள்ள வாக்கியங்களை 'க்ளிக்' செய்தால் ஆடியோகுரல் உச்சரிக்கவும் செய்கிறது. அதே வாக்கியத்தை நாம் நம் குரலில் ரெகார்ட் செய்து பின்னர் செயலிக்குரலுடன் ஒப்பிட்டுக் கொள்ளலாம்.



all 21/11/17